பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 16 வியாழக்கிழமை 01.09.2022 கதிர் 187

## நாடு முழுவதும் பேரிடர்

இலங்கை முழுவதும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக மலை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன.

அத்துடன் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

# இலங்கைக்கு முதல் கட்டமாக 2.9 பில்லியன் அமெ. டொலர்!




## சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

சர்வதேச நாணய நிதியப் பணியாளர்கள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையில் சுமார் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதி வழங்குவதற்கான பணியாளர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

## நாமாக எழுந்து நிற்கும் தீர்வைத் தேட வேண்டும்



### விமல் எம்.பி. வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியம் என்ற கோயிலில் காணிக்கை கட்டுவதால் மட்டும் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

## இலங்கைக்கு நாளை வருகின்றார் கோட்டா?



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை நாடு திரும்பவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் ஜனாதிபதி பதவியிலிருந்த கோட்டாபய, கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஏற்பட்ட மாபெரும் மக்கள் எழுச்சியால் ஜூலை 13 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறினார். மாலைதீவு சென்ற அவர், அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார்.

### சஜித் கட்சியின் அலுவலகத்தில்

## துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் பெண் பணியாளரின் சடலம் மீட்பு!


கேகாலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலத்துக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை, களுகல்ல மாவத்தையிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் பணியாற்றிய கேகாலை, ஹம் புதுகல பகுதியைச் சேர்ந்த சகுந்தலா வீரசிங்க (வயது 36

## மரணத்திலும் பிரியாத தம்பதி

### - கண்டியில் சோகம்



திருமண பந்தத்தில் இணைந்து 60 வருடங்களாகச் சிறந்த புரிந்துணர்வுடன் இணைபிரியாமல் வாழ்ந்த தம்பதியினர் மரணத்திலும் பிரியாமல் ஒன்றாக உயிரிழந்த சம்பவம் கண்டி - குருதெனிய, தம்பவெல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான ஆர்.ஏ.எஸ். ரணசிங்க (வயது - 88), அவரது மனைவியான ஏ.ஜி. பண்டாரநாயக்க ( வயது - 81) ஆகிய இருவருமே

### ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே படுகொலை வழக்கு:

## முன்னாள் போராளி உட்பட 2 சந்தேகநபர்கள் விடுதலை



முன்னாள் அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 16 பேரைப் படுகொலை செய்தனர் என்று குற்றம்சுமத்தப்பட்டிருந்த முன்னாள் கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரே மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினரான 'மொரிஸ்' என்றழைக்கப்படுகின்ற செல்வராஜா கிருபாகரன் ஆகியோர் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## தொடரும் துப்பாக்கிச்சூடுகள்; 3 மாதங்களில் 26 பேர் கொலை

இலங்கையில் கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையான மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட



## 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' பிரயோகிக்கப்படவேமாட்டாது

### நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு



அரசால் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்படமாட்டாது என நாடாளுமன்றத்தில் அரசு உறுதியளித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேற் கண்டவாறு உறுதியளித்தார்.

## ஐ.நா. நெருக்கடியிலிருந்து அரசைக் காப்பாற்றுவோம்!



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில்

இலங்கைக்குக் காத்திருக்கும் நெருக்கடிகள் தொடர்பில் நாம் அரசுக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம்.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் பெரிய பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் நாடு தற்போதும் மிகப்பெரும் அபாய

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## பயங்கரவாத.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசு அரச பயங்கரவாதத்தை கட்ட விழ்த்து விட்டது. மக்களின் அரசியல் உரிமைகள், கருத்து வெளியிடும் உரி மைகள் பறிக்கப்பட்டதா?' என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கேள்வி எழுப்பி னார்.

அரசு, கைது செய்யப்பட்ட பல் கலைக்கழக மாணவர்கள் மீது பயங்கர வாதத்தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்காது. ஆனாலும், பொதுச் சட்டங் களின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தினேஷ் கூறினார்.

இதேவேளை, அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராகக் கொழும்பில் நேற்றுமுன்தினம் அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன் னெடுத்த ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட 28 பேரும், மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னி லைப்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களைப் பிணையில் விடுவிக்க நீதி வான் உத்தரவிட்டார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் மூவரைப் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க அரசு முன்னெடுத்த நடவடிக் கைக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்விலும் இந்த விடயம் உள் ளடக்கப்பட்டுள்ள நிலையிலேயே அரசு மேற்கண்டவாறு தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது.

## ஐ.நா ...........

நிலைக்குக் கொண்டு செல்லப் படுகின்றது.

இந்த மாதம் ஜெனிவாவில் இலங்கைக்குப் பெரிய நெருக்கடிகள் காத்திருக்கின்றன. ஜெனிவா நெருக் கடிகளைப் பொறுத்தவரையில் நாம் அரசுக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம்.

நாம் மற்றவர்களைப் போன்று பெட்டிகளுடன் ஜெனிவாவுக்குச் செல்ல மாட்டோம். எமது நாட்டைப் பற்றி ஒருபோதும் வெளிநாடுகளுக்குப் புறம் சொல்லவோ முறையிடவோ மாட் டோம். நாட்டுக்காகவே செயற்படுவோம் - என்றார்.

## தொடரும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதில் பாதாள குழுக்களுடன் தொடர்புடையவர்களுக்கு இடையில் காணப்பட்ட மோதல்களாலேயே அதிக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதி வாகியுள்ளன.

நாட்டில் நேற்றும் இரு துப்பாக் கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின. இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

## நாடு முழுவதும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, நிலவிவரும் மழை யுடனான வானிலையால் நாட்டில், வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் அதிகம் உள்ள பகுதிகளுக்கு மீட்புப் பணிக்குச் செல்ல விமானப் படை தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

## சஜித் கட்சியின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட அமைப் பாளருக்குரியது.

இந்தப் பெண் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளாரா அல்லது இது ஒரு கொலையா என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வரு கின்றன.

## ஜெயராஜ்............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார, வழக்கின் தீர்ப்பை இன்று அறிவித்தார்.

வெலிவேரிய மைதானத்துக்கு அருகில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி, தற்கொலைக் குண்டு தாரியைப் பயன்படுத்தி முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே உட்பட 16 பேரைக் கொலை செய்தமை, மேலும் 84 பேரைக் கொல்ல சதி முயற்சி செய்தமை உள்ளிட்ட 31 குற்றச்சாட்டுக்களின் கீழ், மேற்படி இரு சந்தேகநபர்கள் மீது கம்பஹா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான குற்றச்சாட் டுக்களைப் பரிசீலித்த கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார, சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட வில்லை எனக் குறிப்பிட்டு, அவர் களை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

## இலங்கைக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கப்பூரில் இருந்து ஜூலை 14 ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும் இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்தார்.

அதன்பின்னர் அவர் அண்மையில் தாய்லாந்து சென்றார். இந்நிலையி லேயே கோட்டாபய நாளை நாடு திரும் புகின்றார் எனத் தகவல் வெளியா கியுள்ளது.

இலங்கை வரும் கோட்டாபயவுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. முன்னாள் ஜனாதிபதிக்குரிய சகல சிறப்புரிமைகளும் அவருக்குக் கிட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரணத்திலும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்துள்ளனர். ரணசிங்க நேற்றுமுன்தினம் காலை யில் உயிரிழந்துள்ளார். கணவரின் பிரிவால் கவலையுற்றிருந்த மனை வியின் உயிரும் ஓரிரு மணிநேரத் துக்குப் பின்னர் பிரிந்துள்ளது.

இந்தத் தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகளும், 11 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

## இலங்கைக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 48 மாதங்களுக்காக இந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதி யத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கியஸ் தர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மேற் கொண்ட பேச்சுக்களையடுத்து, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது எனச் சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரினபொருளாதாரஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல், நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், பாதிக்கப்படக்கூடியவர்க ளைப் பாதுகாத்தல் மற்றும் ஊழல் அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கான கட்டமைப்பு சீர்திருத்தங்களை விரைவு படுத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சி திறனை வெளிக்கொணர்தல் ஆகியன இந்த நிதித் திட்டத்தின் நோக் கங்களாகும்.

## நாமாக எழுந்து.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் தீர்வைத் தேட வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன் னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தொடர்ச்சியாக பிரச்சினைகளை பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடியாது. தீர்வுத் திட்டத்தை முன் வைக்கும் வகையிலேயே புதிய கூட்டணியை உருவாக்கின்றோம். அதன் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர் வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதில் இணையுமாறு அனைத்துத் தரப் பினருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியம் ஒரு தொகை கடனை வழங்குவதால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? அவ்வாறு தீர்ந்துவிடும் என நினைப்பவர்களும் உள்ளனர். ஆனால், அது உண்மை யல்ல. நாமாக எழுந்து நிற்கும் தீர்வைத் தேட வேண்டும்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியேறியுள்ள டலஸ் அணியுடனும் பேச்சு நடத்தப்படும். அத்துடன், தேசியவாத சக்திகள் மற்றும் மாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் உட்பட கொள்கையை ஏற்கக்கூடிய அனைவரையும் எம்முடன் இணைய மாறு அழைக்கின்றோம் - என்றார்.

## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந் தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப் புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## போராட்ட போபியா

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கவனவீர்ப்புகள் என்பவைதான் இலங்கையின் அரசியல் கலாச்சாரங்களில் முக்கியமானவை என்றாகிவிட்டன.

நீதியும், நெறிமுறையும், சட்டத்தின் ஆட்சியும் தொலைந்துவிட்டமையால், அதனால் பீறிடும் மக்களின் எதிர்ப்புணர்வுகள் இப்படி வெகுஜன எழுச்சிக் கோலங்களாக வெளிப்பட்டு நிற்கின்றன.

மக்களின் சீற்றம் உச்சம் பெறும் போது இந்த எழுச்சி கோலங்களும் தீவிரம் கொள்கின்றன; மூர்க்கமடைகின்றன.

மக்களின் கோபம் பெரும் ஆர்ப்பாட்டமாக – களேபரமாக – வெளிப்பட்டமையால் ஒரு நிறைவேற்றதிகார ஜனாதிபதியே தமது பதவியை விட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஓடித்தப்ப வேண்டிய நெருக்கடி ஏற்பட்டமை இலங்கை அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்று.

மக்களின் எழுச்சிப் போராட்டங்கள், அவற்றுக்கான காரண காரியங்களைக் கவனிக்காமல் அல்லது புரிந்து கொள்ள இயலாமல், அரசியல் தலைவர்கள் நடந்து கொள்வதன் விபரீத விளைவு இத்தகைய நிலைமைகளை உருவாக்குகின்றது என்பது கண்கூடு.

2015 முதல் 2019 வரை இந்த நாட்டில் நல்லாட்சி அரசு என்ற பெயரில் மைத்திரி – ரணில் நிர்வாகம் நடந்தது. அந்த சமயங்களில் எல்லாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் இருந்து ஈழத் தமிழர்களின் முக்கியமான நினைவு நாள்கள் எல்லாம் வழமை போல குழப்பமின்றி அனுஷ்டிக்கப்பட்டன; நினைவு கூரப்பட்டன.

ஆனால் 2019 நவம்பரில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களின் மனஉணர்வுகளைக் கவனத்தில் எடுக்காமல் அல்லது கணியாமல் தமது தனிப்பட்ட பேரினவாத வெறிப்போக்கை இந்த ஆர்ப்பாட்ட விடயங்களில் வெளிப்படுத்தினார். தமிழர்கள் தமது இழப்புக்களை ஒட்டிய நினைவு கூரலுக்கு அவர் மனிதாபிமான ரீதியில்தன்னும் இடமளிக்கவில்லை. ஈழத் தமிழர்களின் எழுச்சித் தினங்கள், அவற்றை ஒட்டிய ஒன்று கூடல்கள், தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றோரின் நினைவு நாள்கள், அஞ்சலி நிகழ்வுகள் போன்றவற்றை ஒட்டிய விடயங்களுக்குப் பின்னால் – காணாமல் போனோர் உறவுகளின் போராட்டங்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான கவனவீர்ப்புகள், போன்றவற்றுக்குப் பின்னால் கோட்டாபயவின் படைகளும் புலனாய்வாளர்களும், உளவுப் பிரிவினரும் தடியை ஒட்டிக்கொண்டு நின்றார்களே தவிர, ஜனாதிபதியின் சொந்தப் பிரதேசத்தில் – தென்னிலங்கையில் – குறிப்பாக அம்பாந்தோட்டையில் கூட, ராஜபக்ஷக்களுக்கும் அப்போதைய ஜனாதிபதிக்கும் எதிரான போராட்ட எழுச்சிக் கோலங்களை அவர்கள் சரிவரக் கவனிக்கவில்லை.

தமிழர்களின் நினைவேந்தல்களுக்கான ஒன்று கூடல்கள், ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள், கவனவீர்ப்புகள் போன்றவற்றுக்கு எதிராக தடி ஒட்டிய மாதிரி இந்தத் தெற்குப் போராட்டக்காரர்கள் விடயத்தை கோட்டாவின் புலனாய்வு உளவு அமைப்புகள் கவனிக்கவில்லை. அதன் விளைவை கோட்டாபய அனுபவிக்க வேண்டியவரானார்.

இப்போது விடயம் மாறி நடக்கின்றது. நல்லூர் திருவிழா முழுவதும் திலீபன் நினைவிடம் களைகட்டியது. படைப் புலனாய்வு மற்றும் உளவுப் பிரிவுகள் அதில் தலையிடக் கூட இல்லை.

ஆனால் தென் இலங்கையில் அன்றாட வாழ்வுக்கு வழியின்றி மக்கள் நடத்தும் போராட்டங்களை – அரசை எதிர்ப்பு நடவடிக்கைகளை – கவனித்து அதற்கு எதிராக கிடுக்கிப் பிடி பிடிக்கிறது அரசு.

அந்தக் கிடுக்குப் பிடியில் வடக்குக் கிழக்கில் தமிழர் தாயக நினைப்பை – இங்குள்ள போராட்டக் கிளர்ச்சியை கண்டும் காணாமல் இருக்கிறது கொழும்பு.

கொழும்பு ஆட்சிப் பீடத்திற்கு இப்போது போராட்ட போபியா. அதுவும் பல்கலைக்கழக மாணவர்கள், 'அறகல்ய' போன்ற தரப்பினரின் போராட்டங்கள் தொடர்பில் மட்டும்தான் இந்த போபியா...!

# கிளிநொச்சி நகர சபைக்கான எல்லைகளை மீள்நிர்ணயம் செய்க!

## பிரதமருக்கு சந்திரகுமார் கோரிக்கைக் கடிதம்



கிளிநொச்சி நகர சபைக்கான எல்லை நிர்ணயத்தை மீள பரீசீலனை செய்து நியாயமான அடிப்படையில் அனைத்து தரப்பினர்களதும் கருத்துக்களைப் பெற்று வரையறுக்குமாறு கோரி பிரதமருக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு. சந்திரகுமார் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்தும் அமைச்சரவை அனுமதி மகிழ்ச்சி தருக்கிறது.

இருப்பினும் நகர சபைக்கான எல்லை நிரணயத்தில் சமூகங்களைப் பிரிக்கின்ற வகையிலும், குறுகிய அரசியல் இலாபங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப் பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

சன அடர்த்தி செறிவாகவும், நகர கட்டமைப்பொன்றுக்குத் தேவையான அனைத்து அம்சங்களைத் தன்னகத்தே வைத்திருந்தும் நீண்டகாலமாக பிரதேசசபை என்ற தகுதி நிலையில் நிர்வகிக்கப்படும் கிளிநொச்சி நகரை, நகரசபை என்ற படிநிலைக்கு தரம் உயர்த்துவதற்குரிய முன்மொழிவுகள் தங்களது அரசால் வெளியிடப்பட்டிருப்பதை கிளிநொச்சி நகர மக்களின் சார்பில் பேருவகையுடன் வரவேற்கிறோம்.

போரால் மிகக்கடுமையாகப் பாதிப்புற்ற பிரதேசங்களில் ஒன்று என்றவகையில் மேற்படி தர முயர்த்தும் செயற்பாடு, நீடித்ததும் நிலையானதுமான அபிவிருத்தியை நோக்கி கிளிநொச்சி நகரை முன்னகர்த்தும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

எனினும், ஓர் உள்ளூராட்சி அமைப்பொன்றைத் தரமுயர்த்துவது தொடர்பாகக்கருத்தில்எடுக்கப்பட்டிருக்கவேண்டிய விடயங்கள் அனைத்தும் கிளிநொச்சியை நகர சபையாக்கும் விடயத்தில் எச்சரிக்கையோடு தவிர்க்கப்பட்டிருப்பதோடு, ஒருசில தனிநபர்களின் அரசியல் அபிலாகைள் மட்டுமே முன்னிறுத்தப்பட்டிருப்பதும் வேதனையான விடயமாகும்.

கிளிநொச்சி நகர் உள்ளடங்கிய கரைச்சி பிரதேச சபையில் பதினோரு உறுப்பினர்களை கொண்டிருக்கும் கட்சியென்ற அடிப்படையில் பின்வரும் விடயங்களைத் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்.

நகருக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதேசங்கள் தொடர்பிலோ அல்லது அதன் எல்லைகளாக வரக்கூடிய கிராமங்கள் தொடர்பிலோ அங்கே வசிக்கக்கூடிய மக்களுடனோ அல்லது அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் அமைப்புகளுடனோ எந்தவிதமான கலந்துரையாடலும் எந்த சந்தர்பத்திலும் அதற்கு பொறுப்பானவர்களால் நடத்தப்பட்டிருக்கவில்லை.

கரைச்சி பிரதேச சபைக்குள் மொத்தமாக 21 வட்டாரங்கள் இருக்கின்றமையும் அவற்றுள் குறிப்பிடத்தக்க அளவு நகர சபை என்ற பரிமாணத்துக்குள் வரக்கூடியதாக இருந்தாலும், வெறும் மூன்று வட்டாரங்களை மட்டுமே கிளிநொச்சி நகரசபைக்கென ஒதுக்கீடு செய்திருக்கின்றமை, இயற்கைக்கு மாறானது என்பதோடு, நிர்வாக செயற்பாட்டுக்குரிய சபையொன்றை அமைப்பதற்கும் சவாலானதாக இருக்கும்.

நகரின் மத்தியிலும், அண்மையிலும் உள்ள சில கிராமங்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அதேநேரம், நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு பகுதி நகரசபை எல்லைக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

நகரின் முக்கிய பகுதிகளாகத் தற்போது கருதப்படும் பல பகுதிகள் எந்தவித நியாயமுமற்று வெளியே தள்ளப்பட்டிருப்பது அங்கே நீண்ட காலமாக வசித்துவரும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தின்மீது திட்டமிட்ட வகையில் மேற் கொள்ளப்படும் ஒரு தாக்குதலாகவே பார்க்கப்படுகின்றது.

எனவே, குறுகிய அரசியல் நலன்களை மட்டுமே முன்னிறுத்தி, அங்கே வசிக்கக்கூடிய மக்கள் மத்தியில் நிரந்தரமான பிரிவினை உருவாக்கக்கூடிய எவருடனும் கலந்தாலோசிக்கப்படாத நகரசபை உருவாக்கும் முயற்சியை மறுபரிசீலனை செய்து, சரியானதும் பொருத்தமானதுமான பொறி முறையொன்றின் கீழே கிளிநொச்சியை நகர சபையாக்குவதற்கான செயற்பாடுகளை மேற் கொள்ளுமாறு தங்களை பணிவுடன் வேண்டி நிற்கிறோம். - என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். சாவகச்சேரி நீதிமன்றிலிருந்து இரு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இருந்து இரு சந்தேக நபர்கள் தப்பி ஓடிய நிலையில் ஒருவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மற்றையவர் தலைமறைவாகியுள்ளார்.

போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் நேற்று (புதன்கிழமை) சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை , நீதிமன்று இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்நிலையில் நீதிமன்ற வளாகத்தில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் இருந்து இருவரும் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியவர்களை சிறைக்காவலர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து துரத்திய போது ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மற்றையவர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

தப்பி சென்றவரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.






# பஸ் தரிப்பு நிலையத்துக்குள் புகுந்தது லொறி ஜகர்த்தாவில் கோர விபத்து: பத்துப் பேர் சாவு

ஜகர்த்தா,செப்.02

பஸ் தரிப்பு நிலையத்துக்குள் லொறி புகுந்து மோதிய விபத்தில் பள்ளி முடிந்து வீட்டிற்குச் செல்லவதற்காக பஸ்ஸிற்குக் காத்திருந்த குழந்தைகள் உள்பட 10 பேர் உயிரிழந்தனர். இந்தோனேசியா நாட்டின் தலைநகர் ஜகர்த்தாவின் உள்ள பிகசி நகரில் ஆரம்பப்பள்ளி ஒன்றுக்கு அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அந்தப் பள்ளியில் நேற்று வகுப்பை முடித்துவிட்டு வெளியே வந்த பள்ளிக் குழந்தைகள் 20 பேர் வீட்டிற்கு செல்வதற்காக அருகே உள்ள பஸ் நிறுத்தத்திற்கு சென்றுள்ளனர். குழந்தைகள் பஸ்ஸுக்காக காத்திருந்தனர். அப்போது, அந்த சாலையில் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வந்த லொறிப்பள்ளிக்குழந்தைகள் நின்றுகொண்டிருந்த பஸ் தரிப்பு நிளையம் மீது வேகமாக மோதியது. பின்னர் அங்கிருந்த மின் கம்பத்தையும் இடித்து வீழ்த்தியது . மின் கம்பம் அச்சமயம் சாலையில் வந்துகொண்டிருந்த வான் மீது விழுந்தது.

இந்தக் கோர விபத்தில் பள்ளிக்குழந்தைகள் உள்பட 10 பேர் உயிரிழந்தனர். மின் கம்பம் விழுந்ததில் வான் சாரதியும் உயிரிழந்தார்.

மேலும் பலர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் படுகாயமடைந்த பள்ளிக்குழந்தைகளை மீட்டு சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திய லொறி டிரைவரை கைது செய்யப் பட்டுள்ளார்.

# விண்வெளி நிலையத்தில் சீனா நெற் பயிர் வளர்த்துச் சாதனை



பீஜிங்,செப்.01

சீன விண்வெளி நிலையத்தில் பூஜ்ய புவியீர்ப்பு விசை கொண்ட ஆய்வகத்தில் விதைகளை கொண்டு நெற்பயிரை வளர்த்து விஞ்ஞானிகள் சாதனை படைத்து உள்ளனர்.

விண்வெளியின் சுற்று வட்ட பாதையில் நிரந்தர விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்து டன் சீனா பணியாற்றி வருகிறது. இந்நிலையில், கட்டு மான பணி நிறைவடையாத சீன விண்வெளி நிலை யத்தில், பூஜ்ய புவியீர்ப்பு விசை கொண்ட வென்சியான் என்ற ஆய்வகத்தில் விதைகளை கொண்டு நெற்பயிர் களை உருவாக்கும் முயற்சியில் சீன விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். இதற்கான பணிகள் கடந்த ஜூலையில் தொடங்கின. இதற்காக இரு வகை செடிகளின் விதை களை அவர்கள் பயன்படுத்தி உள்ளனர். தாலே கிரஸ் மற்றும் அரிசி வகை செடியை உற்பத்தி செய்யும் பணி தொடங்கியது. இதில், தாலே கிரஸ் 4 இலைகளை உற் பத்தி செய்தது. இந்த செடியானது, நம்மூரில் உள்ள முட்டைகோஸ் போன்ற பசுமையான இலைகளை கொண்ட காய்கறிகளை ஒத்தது. ஆனால், அரிசி விதை யானது 30 செ.மீ. உயரத்திற்கு வளர்ந்து விஞ்ஞானி களை ஆச்சரியமடைய செய்துள்ளது. விண்வெளியில் கதிரியக்கங்கள் அதிக அளவில் இருக்கும். இந்த சூழலில், தாவரங்கள் எப்படி நடந்து கொள்கின்றன என் பது பற்றி புரிந்து கொள்வதற்காக சீன விஞ்ஞானிகள் வாழ்க்கை அறிவியல் பரிசோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபற்றி சீன அறிவியல் அகாடெமியின் ஆராய்ச் சியாளர் ஜெங் ஹுகியாங் கூறும்போது – விண்வெளி யில் தலா இரு தாவரங்களின் வாழ்க்கை சுழற்சி பற்றி இரண்டு பரிசோதனைகள் வழியே பகுப்பாய்வு செய் யப்படும். அவற்றை வளர்க்க நுண்ணிய ஈர்ப்பு விசை கொண்ட சுற்றுச்சூழல் அமைப்பினை எப்படி பயன் படுத்தலாம் என்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது பற்றியும் அறியப்படும் என கூறியுள்ளார். பூமி போன்ற சூழலை ஒத்த, செயற்கை சுற்றுச்சூழலை கொண்டு மட்டுமே இந்த பயிர்களை வளர்க்க முடியும். செடிகளின் வளர்ச்சியை ஒப்பிட்டு, விண்வெளியில் தகவமைத்து கொள்ளும் வகையிலான கூடுதல் பயிர்களை ஆய் வின் வழியே நாம் கண்டறிய முடியும் என அவர் கூறி யுள்ளார்.

விண்வெளியில் தாவர விதைகள் பரிசோதனையில் சீனா ஈடுபடுவது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு ஜூலையில், விண்வெளியில் இருந்து திருப்பி கொண்டு வந்த விதைகளை வைத்து முதல் தொகுதி அரிசியை அறுவடை செய்தது. சொர்க்கத்தில் இருந்து வந்த அரிசி என பெயரிடப்பட்ட இந்த வகை அரிசிக்கான 40 கிராம் விதைகள், 7.6 லட்சம் கி.மீ. தொலைவுக்கு நிலவுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு பூமிக்கு திரும்பி கொண்டு வரப்பட்டன. அதிக கதிரியக்கங்கள், புவியீர்ப்பு விசையற்ற சூழல் போன்ற சுற்றுச்சூழலில் விண்வெளியில் சீன விஞ்ஞானிகள் அரிசியை உற் பத்திசெய்து இருப்பது விஞ்ஞான வளர்ச்சியின் அடுத்த நிலையாக உற்று நோக்கப்படுகிறது.

# சேகுவேராவின் புதல்வர் வெனிசுலாவில் மரணம்

கராக்கஸ்,செப்.01

புரட்சியாளர் சேகுவேராவின் மகன் கமிலோ சேகுவேரா வெனிசுலாவில் மரணமானார். கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்டு, ஆட்சி மாற்றத்துக்கு வித்திட்டவர் சேகுவேரா. புரட்சியாளர், டாக்டர், அரசியல்வாதி, இலக்கியவாதி எனப் பன்முகத்தன்மை கொண்ட சேகுவேராவுக்கு மொத்தம் 4 மகன்கள். அவர்களில் 3 ஆவது மகன் கமிலோ சேகுவேரா. 60 வயதான கமிலோ சேகுவேரா கியூபாவில் தனது மகளுடன் வசித்து வந்தார். கியூபா தலைநகர் ஹவானாவில் உள்ள சேகுவேரா ஆய்வு மையத்தின் இயக்குனராக இவர் இருந்து வந்தார். அதில் சேகுவேராவின் கிளர்ச்சி தொடர்பான ஆவணங்கள் மற்றும் பிற பொருள்கள் உள்ளன.

இந்தநிலையில் வெனிசுலா நாட்டுக்கு சென்றிருந்த கமிலோ சேகுவேரா கடந்த திங்கட்கிழமை நுரையீரல் இரத்த உறைவு காரணமாக மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என கியூபாவின் அரசு செய்தி நிறுவனமான பிரென்சா லத்தினா தெரிவித்துள்ளது.

கமிலோவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கியூபா அதிபர் மிகுவல் டியாஸ் கேனல் வெளியிட்டு டுவிட்டர் பதிவில் ஆழ்ந்த வலியுடன், சேகுவேராவின் மகனும் அவரது யோசனைகளை ஊக்குவிப்பவருமான கமிலோவிடம் நாங்கள் விடைபெறுகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 400 சினூக் ஹெலிக்கொப்டர்களின் பாவனையை நிறுத்தியது அமெரிக்கா

வொஷிங்டன்,செப்.01

அமெரிக்க இராணுவம் சுமார் 400 சினூக் ரக ஹெலிக்கொப்டர்களின் செயலாடுகளை தற்காலிக மாக நிறுத்தி வைத்துள்ளது.

போயிங் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான சினூக் ஹெலிக்கொப்டர்கள் அமெரிக்க இராணுவ வீரர்களைப் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்லவும், சரக்குகளை ஏற்றிச் செல்லவும் 60 ஆண் டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்நிலையில், அடிக்கடி எஞ்சின் தீப்பிடித்து விபத்துக்குள்ளாவதை அடுத்து அமெரிக்கப் பாதுகாப்புப் படையின் பயன்பாட் டில் உள்ள 400 சினூக் ஹெலிக்கொப்டர்களையும் பயன்பாட்டிலிருந்து நிறுத்துவதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

ஆனால், இந்திய விமானப் படையில் 15 சினூக் ஹெலிக்கொப்டர்கள் தற்போது பயன்பாட்டில் உள் ளன. இந்நிலையில், ஒட்டுமொத்தமாக அனைத்து சினூக் ஹெலிக்கொப்டர்களையும் அமெரிக்க இரா ணுவம் நிறுத்துவதற்கான முழு விவரங்களை அளிக் குமாறு போயிங் நிறுவனத்திடம் இந்தியத் தரப்பில்



விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி யுள்ளது. அமெரிக்கா அளிக்கும் விளக்கத்திற்கு பிறகு, இந்திய விமானப் படையும் சினூக் ரக ஹெலிக்கொப் டர்களின் பயன்பாட்டை நிறுத்துவது குறித்து முடி வெடுக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பூலித்தேவரின் வீரமும் உறுதியும் மெச்சத் தக்கவை என்கிறார் மோடி





சுதந்திர போராட்ட வீரர் பூலித்தேவரின் வீரமும் உறுதியும் எண்ணற்ற மக்களுக்கு உத்வேகத்தை அளிக்கிறது எனப் பிரதமர் மோடி கூறியுள்ளார்., தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே நெற்கட்டும் செவலில் சுதந்திர போராட்ட வீரர் மாமன்னர் பூலித்தேவன் 307 ஆவது பிறந்தநாள் விழா இன்று நடக்கிறது.

விழாவையொட்டி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நினைவு மாளிகையில் உள்ள பூலித்தேவன் முழு உருவ வெண்கலச் சிலைக்கு தமிழக அரசு சார்பிலும், பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள் சார்பிலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

இந்தநிலையில் பிரதமர் மோடி தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், மாவீரன் பூலித்தேவருக்கு அவரது பிறந்த நாளில் வணக்கங்களை செலுத்துகிறேன். அவரது வீரமும் உறுதிப்பாடும் எண்ணற்றோருக்கு ஊக்கமளித்து வருகிறது. முன்னணியில் நின்று அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போரிட்டவர். மக்களுக்காக எப்போதும் தளராது பாடுபட்டவர். எனக் கூறியுள்ளார்.

## அம்புலன்ஸ் கதவு 'ஜாம்' ஆனதால் விபத்து நோயாளி பரிதாபச் சாவு!




கோழிக்கோடு,செப்.01

கேரளாவில் விபத்தில் படுகாயம் அடைந்தவரை ஏற்றி வந்தஅம்புலன்ஸின் கதவில் ஏற்பட்ட கோளாறால் அதைத் திறக்க முடியவில்லை. அதனால், உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாமல் அவர் பரிதாபமாக இறந்தார்.

கோழிக்கோடு அருகே வசித்தவர் கோயா, 53. இவர், நேற்று முன்தினம் நடந்த ஒரு விபத்தில் படுகாயம் அடைந்தார். இதையடுத்து அவரை அம்புலன்ஸில் ஏற்றி வந்தனர். உடன், கோயாவின் நண்பரும் இருந்தார். கோழிக்கோடு அரசு மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வந்ததும், கோயாவுடன் இருந்த நண்பர், கதவைத் திறக்க முயன்றார். அப்போது கதவுப் பூட்டில் கோளாறு ஏற்பட்டு, 'ஜாம்' ஆனது.

அம்புலன்ஸ் சாரதி, மருத்துவமனை ஊழியர்கள் இணைந்து கதவை திறக்கக் கடுமையாக முயற்சித்தனர். ஆனால் முடியவில்லை. அங்கு திரண்ட பொதுமக்கள், கோடாரியின் உதவியுடன் பூட்டை உடைத்து, அம்புலன்ஸ் கதவை திறந்தனர். அதற்குள், கோயா பரிதாபமாக இறந்தார். உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாததால், கோயா இறந்து விட்டார் என டாக்டர் கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கு தடுப்பூசி இந்தியாவில் தயாரிப்பு



இந்தியாவில் பெண்களை பாதிக்கும் கர்ப்பப்பைப் வாய் புற்று நோயிக்கான தடுப்பூசி இந்தியாவில் இன்று அறிமுகப்படுத்தப் படுகிறது.

பெண்களுக்கு மார்பகம், கர்ப்பப்பை வாய் போன்ற உடல் பாகங்களில் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

இதில் கர்ப்பப்பை வாயில் தொற்று ஏற்படும்போதே கண்டுபிடித்துவிட்டால் புற்று நோய் ஏற்படுவதை ஆரம்பத்திலேயே தடுத்துவிட முடியும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

கர்ப்பப்பை வாய் புற்று நோயை வராமல் தடுக்க முன் கூட்டியே தடுப்பூசி வழங்கப்படுகிறது. இந்த தடுப்பூசி வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட நிலையில், தற்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்டு அது இன்றுவ்வெளியிடப்படுகிறது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட பரிசோதனைகள் முடிந்த நிலையில், ஜூன் 8 ஆம் தேதி அன்று தடுப்பூசி தயாரிக்க சீரம் நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. பரிசோதனைகள் வெற்றியடைந்த நிலையில், மத்திய உயிரி தொழில்நுட்ப துறையும், சீரம் இன்ஸ்டிட்யூட் நிறுவனமும் இணைந்து தடுப்பூசியை அறிமுகம் செய்கின்றன.

## அம்புலன்ஸ் வராததால் கர்ப்பிணி மனைவியை தள்ளுவண்டியில் கொண்டு சென்ற கணவன்!

தேமா,செப்.01

மத்திய பிரதேசத்தின் தமோ மாவட்டத்தின் ரானே கிராமத்தை சேர்ந்த கர்ப்பிணி ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது.

உடனே ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்காக '108' அம்புலன்ஸுக்குக் கணவர் போன் செய்தார். ஆனால் 2 மணி நேரமாக அம்புலன்ஸ் வரவில்லை. இதனால் வேறு வழியில்லாமல் தவித்த அவர், தனது மனைவியை தள்ளுவண்டியில் கிடத்தி அருகில் உள்ள சுகாதார மையத்துக்கு கொண்டு சென்றார். அவரது கிராமத்தில் இருந்து ஒரு கி.மீ. தொலைவில் இருந்த அந்த மையத்தில் டாக்டரோ, நர்ஸுகளோ இல்லை. பின்னர் அரசு அம்புலன்ஸ் ஒன்றில் அங்கிருந்து ஹட்டாவுக்கு தனது மனைவியை அழைத்து சென்றார். அங்குள்ள ஆஸ்பத்திரியிலும் சரியான சிகிச்சை கிடைக்காததால், பின்னர் தமோ மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிக்கு கர்ப்பிணி மாற் றப்பட்டார்.

அங்கு அவர் டாக்டர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டு உள்ளார். இதற்கிடையே கர்ப்பிணி ஒருவரை அவரது கணவர் தள்ளுவண்டியில்



ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாக பரவியது. இதைப்பார்த்த மாவட்ட சுகாதார அதிகாரிகள் இந்த விவகாரத்தில் விசாரணைக்கு உத்தரவிட்டு உள்ளனர்.

# ஒரு நாளுக்கு இந்தியாவில் 86 பாலியல் வல்லுறவுகள்!

## வெளியானது அதிர்ச்சிப் புள்ளி விவரம்



*புதுடெல்லி, செப்.01*

*கடந்த ஆண்டில் 'இந்தியாவில் நடந்த குற்றங்கள்' என்ற தலைப்பில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவண காப்பகம் ஒரு புள்ளிவிவர அறிக்கை வெளியிட்டுள்ளது.*

*அதில், கடந்த ஆண்டில் நாடு முழுவதும் 31 ஆயிரத்து 677 கற்பழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது, சராசரியாக நாள் ஒன்றுக்கு 86 கற்பழிப்பு வழக்குகள் பதிவாகி உள்ளன. அதிக அளவாக ராஜஸ்தான் மாநிலத்தில் 6 ஆயிரத்து 337 கற்பழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்தியபிரதேசம் (2,947 வழக்குகள்), மகாராஷ்டிரா (2,496), உத்தரபிரதேசம் (2,845), டெல்லி (1,250) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. அதுபோல், பெண்களுக்கு எதிரான 4 லட்சத்து 28 ஆயிரத்து 278 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது, மணிக்கு சராசரியாக 49 குற்ற வழக்குகள் பதிவாகி உள்ளன. அதிக அளவாக உத்தரபிரதேசத்தில் மட்டும் 56 ஆயிரத்து 83 வழக்குகள் பதிவாகி உள்ளன. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் கற்பழிப்பு, கற்பழித்து கொலை, வரதட்சணை கொடுமை, அசிட் வீச்சு, தற்கொலைக்குத்தூண்டுதல், கட்டாய திருமணம், ஆள் கடத்தல் ஆகியவை அடங்கும். கடந்த ஆண்டு, நாடு முழுவதும் 52 ஆயிரத்து 974 இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டை விட 5 சதவீதம் அதிகம். இவற்றில் 70 சதவீத இணைய குற்ற வழக்குகள் தெலுங்கானா, உத்தர பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, அசாம் ஆகிய மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில், 15 இணைய பயங்கரவாத வழக்குகளும் அடங்கும்.*

# வாகரையில் இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேசத்தின் களப்புப் பகுதிகளில் அமைக்கத் திட்டமிடப்படும் இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்றைய தினம் புதன்கிழமை காலை பிரதேச செயலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இறால் பண்ணைத் திட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். பிரதேச செயலாளரிடம் அது தொடர்பான மகஜரை வழங்க அழைத்த போதும் அவர் வருகை தராமையினால், அலுவலகத்தினுள் சென்று உதவிப் பிரதேச செயலாளரிடம் தங்களது மகஜரைக் கையளித்தனர்.

அத்துடன், ஜனாதிபதிக்கு வழங்குவதற்கான மகஜரை ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.கே.லிங்கராஜா பெற்றுக் கொண்டார்.

பின்னர் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து அந்த இடத்தை விட்டு அகன்று சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் இறால் பண்ணைத் திட்டம் நிறுத்தப்படவேண்டும் என சில மாதங்களுக்கு முன்னர் போராட்டம் நடத்தியிருந்த போதிலும் தற்போது நில அளவை அதிகாரிகள் அப்பிரதேசத்தில் அளவை வேலைகளில் ஈடுபட்டுள்ளமையால் தங்களது முன்னைய போராட்டத்திற்குப் பலன் கிடைக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், பிரதேச மக்கள், சிவில் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் இணைந்து கையளித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

வாகரைப் பிரதேசமானது பல இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வகையில் பெரும்பகுதி கடல் மற்றும் களப்புக்கள் சூழ்ந்த இடமாகவும் ஏனைய பகுதிகள் இயற்கைக் காடுகளாகவும் காணப்படுகின்றன. இங்குள்ள மக்களின் பிரதான தொழில்களாக மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்கள் காணப்படுகின்றன. இவ்வாறு வாகரையில் பல வளங்கள் காணப்பட்டாலும் அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் வறிய நிலையிலேயே உள்ளனர். இந்த நிலைக்கு இயற்கை வளங்கள் அபகரிக்கப்படுகின்றமையும் ஒரு காரணமாக அமைகிறது. தனியார் துறையினரின் பாரிய ஆக்கிரமிப்புக்கள் காரணமாக பல வளங்களை சாதாரண மக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

உதாரணமாக கதிரவெளி கிராமத்தில் இல்மனைட் அகழ்வுக்காக கரையோரக் காணிகள் சட்டவிரோதமாக மக்களை ஏமாற்றி சில அரச அதிகாரிகளின் துணையுடன் அபகரிக்கப்பட்டுள்ளமை நாம் அறிந்த விடயமாகும்.இதற்காக பிரதேச மக்கள்,சமூக ஆர்வலர்கள், சிவில் அமைப்புக்கள் ஆகியன போராடிக் கொண்டிருக்கின்றனர். மேலே குறிப்பிட்டதைப் போன்றதொரு பாரிய இயற்கை வள அபகரிப்பிற்கான முயற்சியொன்று தற்போது வாகரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கட்டுமுறிவு கிராமம் தொடக்கம் வாகரை பிரதேசம் வரையான கரைச்சல்(களப்பு)பகுதியானது இறால் பண்ணை அமைக்கும் திட்டத்திற்காக தற்போது அளவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அளவிடப்பட்ட பகுதி சுமார் 3000 ஹெக்டேயர் நிலப்பரப்புடையதாகும்.

இந்த இறால் பண்ணை திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் பல மடங்கு பாதிப்புக்களை பிரதேச மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். இதன் விளைவுகள் அடுத்த தலைமுறையினரையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மீன்பிடி,கால்நடை வளர்ப்பு,விவசாயம் ஆகிய தொழில்களை ஆதாரமாகக் கொண்ட மக்கள் அனைவரும் இந்த திட்டத்தினால் முற்று முழுதாகப் பாதிக்கப்படுவர். குறிப்பிட்ட சிலருக்கு இறால் பண்ணை மூலம் நன்மைகள் கிடைத்தாலும் சுமார் பதினைந்தாயிரம் பேருக்கு மேலான மக்களின் அன்றாட வாழ்வாதாரம் இந்த திட்டத்தின் மூலம் கேள்விக் குறியாகும் நிலை ஏற்படும்.

வாகரைப் பிரதேசத்தில் சுமார் நாலாயிரம் பேர்(பால் உற்பத்தி சங்கத்தினரின் தரவுக்கமைய) கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வளர்க்கும் சுமார் 27 ஆயிரம் மாடுகள் மற்றும் ஆடுகள் இறால் பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ள குறித்த கரைச்சை பகுதியிலேயே மேய்க்கப்படுகின்றன. இவ்வாறு குறித்த பகுதி மேய்ச்சல் தரை மூன்று தலைமுறைக்கும் அதிகமான காலம் பயன்படுத்தப்படுவதாக பிரதேச மக்கள் மூலம் அறிய முடிந்தது.

இது தவிர வாகரைப் பிரதேச மக்களில் சுமார் பெரும்பாலானோர் களப்புக்கள் மற்றும் குளங்களில் மீன்பிடிப்பதை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். போதிய இலாபம் இல்லாவிட்டாலும் தமது வீட்டுக்கான உணவுத் தேவையையேனும் நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. இவ்வாறான திட்டங்களுக்காக நிலங்கள் வரையறுக்கப்பட்டு அடைக்கப்படும் போது இது போன்ற மீனவர்களால் சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை ஏற்படும். தமது பிரதேச வளத்தைக்கூட பயன்படுத்த முடியாத நிலை உருவாகும். தற்போதும் தமது திறமையால் நாளொன்றுக்கு 2000 ரூபா வரை அன்றாடம் இப்பகுதியில் மீன்பிடித்து வருமானம் பெறுவோரும் இந்த களப்புக்களையே நம்பியுள்ளமை முக்கிய விடயமாகும். மேலும் வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச்செய்கையில் தொடர்ந்தும் ஈடுபடும் மக்களும் இந்தப் பகுதியில் வாடிகள் அமைத்து வசிக்கின்றனர். இறால் பண்ணை அமைப்பதன் மூலம் இவர்களது விவசாயக் காணிகளும் பறிபோகலாம். அத்துடன் இப்பகுதியில் பாலை,வீரை,நாவல் போன்ற பல வகையான மரங்களை கொண்ட காடுகளும் இந்த திட்டத்திற்காக அழிக்கப்படும். இந்த காடுகளை ஆதாரமாகக் கொண்டு வாழும் விலங்குகள், பறவைகளும் நிர்க்கதியாகும் நிலை ஏற்படும்.

இவ்வாறு எண்ணிலடங்காத பல பாதிப்புகள் இந்த திட்டத்தின் மூலம் ஏற்படுவதுடன் எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கும் விளைவுகளும் உள்ளன. இறால் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயன கழிவு நீர் ஆற்றில் கலப்பதன் மூலம் ஆற்று நீரும் மாசடையும் நிலை வரும். இங்கு வாழும் பலர் தமது அன்றாட தேவைக்கு இந்த நீரைப் பயன்படுத்துகின்றனர்.இதனால், பல நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.மேலும்இரசாயனகழிவுநீர்கலக்கப்படுவதால் மீன்கள் அழிந்து மீன்வளம் எதிர்காலத்தில் முற்றாக அழிவடைவதோடு விவசாய நடவக்கைகளும் பாதிக்கப்படும். கடலரிப்பு மற்றும் வெள்ளப்பெருக்கைத் தடுக்கும் கண்டல் தாவரங்களும் அழிவடைந்து போகும்.

இவ்வாறு பல பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்த திட்டத்திற்கு எதிராக பிரதேச மக்கள்,சிவில் அமைப்பினர், மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் தொடர்ந்தும் போராடி வருகின்ற நிலையில் சில அதிகார வரக்கத்தினர் இந்த திட்டத்தினை செயற்படுத்த முனைகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இறால் பண்ணை ஆரம்பிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள்

* கால்நடைகளின் மேய்ச்சல் தரைகள் அழிவடைவதால் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவர்.
* மீன்பிடித் தொழிலாளர்கள் தொழிலை இழப்பர்.
* விவசாய நடவடிக்கைகள் பாதிப்படையும்.
* கண்டல் தாவரங்கள் அழிவடையும். இதனால் கடலரிப்பு,வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும்.
* கழிவு நீர் கலப்பதால் ஆற்று நீர் மாசடையும்.
* மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும்.
* மீன்வளம் அழிவடையும்.
* காடுகள் அழிக்கப்படுவதால் வன விலங்குகளின் வாழிடங்கள் பாதிக்கப்படும்.
* எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும்.
* பிரதேச மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக அதிகார வர்க்கத்தினரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படும்.

– இவ்வாறு பிரதேச மக்கள்,விலங்குகள் மற்றும் இயற்கை வளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைக்கத் திட்டமிடப்படும் இறால் பண்ணை என்ற பெயரிலான வள அபகரிப்பிற்கு பிரதேச மக்கள்,சிவில் அமைப்புக்கள்,இயற்கை ஆர்வலர்கள் என்ற வகையில் எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு உரிய அதிகாரிகள் மக்களின் வேண்டுகோளை ஆராய்ந்து இத் திட்டத்தை முழுமையாகத் தடை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது.

# உலர் உணவுப் பொருள்கள் நாவிதன்வெளியில் வழங்கல்

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)





ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பன் அமைப்பின் மற்றுமொரு நிவாரணப் பணிகள் நாவிதன் வெளி மத்திய முகாம் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

ஹசன் மௌலவி நற்பணி மற்றத்தின் அஸீஸா பௌன்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் சாதிக் ஹஸனினால், நளீர் பௌன்டேசன் அமைப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய முகாம் பிரதேசத்தில் வாழும் சுமார் 200 குடும்பங்களுக்கு உலர்உணவுப் பொதிகள் சளம்பைக்கேணி அஸ்ஸிராஜ் தேசிய பாடசாலை மைதானத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இதன் முதற்கட்டம் முதலாம் வட்டாரம், இரண்டாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம், மத்திய முகாம் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு நளீர் பௌன்டேசன் அமைப்பினருடன் இணைந்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அஸீஸா பௌன்டேசன் பணிப்பாளர் சாதிக் ஹஸன், அதன் உறுப்பினர்கள், நளீர் பௌன்டேசன் அமைப்பின் தலைவர் எம்.ஏ.றஹீம், அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் ஏ.நளீர் மற்றும் அதன் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஹற்றன் நகர சபையை வெகுவிரைவில் மாநகர சபையாக்க பிரதமர் இணக்கம்!

## ஜீவன் தொண்டமான் தகவல்



ஹற்றன் நகர சபையை வெகு விரைவில் மாநகர சபையாகத் தர முயர்த்த பிரதமரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன இணக்கம் தெரி வித்துள்ளதுடன், உதவி அரசாங்க அதி பர் காரியாலயங்களை பிரதேச செய லகங்களாகத் தரமுயர்த்தவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மீதான முதல் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பல்வேறு காரணிகளால் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் தற்போதைய சூழ்நிலைக்கும் பொருந்தும் வகையில் ஜனாதிபதியால் இடைக்கால வரவு– செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசிறை கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை மாற்றங்கள் தொடர்பாக வரவு– செலவுத் திட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்துறையின் வீழ்ச்சிக்கு குற்றஞ்சாட்டுவதாயின் குறுகிய கால கட்டத்தை மாத்திரம் மதிப்பிடக் கூடாது. தேயிலை தொழிற்துறை வீழ்ச்சிக்கு உர பற்றாக்குறை மாத்திரம் பிரதான காரணியல்ல, தேசிய தோட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்படுவதில்லை.

வரவு – செலவுத் திட்டத்தில் பல்வேறு சாதகமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தாலும் ஒருசிலர் வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துரைக்கையில் மலையக மக்கள் வரவு – செலவுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை என அதிருப்தி தெரிவிப்பதைக் காண முடிகிறது.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு– செலவுத் திட்டத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கும், சமுர்த்தி பயனாளர்களுக்கும், 61 ஆயிரம் வறுமை கோட்டில் உள்ள குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்த நிவாரணக் கொடுப்பனவுகள் மலையக மக்களுக்கு ஏதாவதொரு வழிமுறையில் கிடைக்கப்பெறும்.

இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றிணைந்துசெயற்படஎதிர்பார்த்துள்ளோமே தவிர, மலையகம் என வேறுப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. விவசாயக் கடன் நிவாரணம் வழங்க வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளதன் பயன் மலையக மக்களுக்குக் கிடைக்கப் பெறும்.

தனியார் தோட்டங்களுக்கு வரவு – செலவுத் திட்ட நிவாரணம் கிடைக்கப் பெறுமா என்பது சந்தேகத்துக்குரியது. இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற மனிதாபிமான அடிப்படையிலான நிவாரன பொதி விநியோகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலையீடு செய்தாக ஒருசிலர் குறிப்பிடுகின்றமை அடிப்படை யற்றதாகும். நிவாரனம் முழுமையாக கிடைக்கப்பெற்றதா என்பது சந்தேகத்திற்குரியது.

தமக்கான உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வலு மலையக மக்கள் மத்தியில் உள்ளது. இருப்பினும் அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது. மலையக மக்களுக்கான காணி மற்றும் வீட்டு உரிமை தொடர்பில் பல்வேறு தரப்பினர் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறார்கள். தோட்ட நிர்வாகத்தினர் தற்போதும் மலையகத்தில் அடிமை முறைமை கட்டமைப்பை முன்னெடுக்க முயற்சிக்கிறார்கள். இறுதியில் குற்றச்சாட்டுக்கள் மலையக அரசியல்வாதிகள் மீதும், தொழிற்சங்கங்கள் மீதும் சுமத்தப்படுகின்றன.

அரச கட்டமைப்பு தொடர்பில் வரவு – செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வரவேற்கத்தக்;கவை. மண்ணெண்ணெய் விலையின் உண்மை விலையை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். நிவாரன விலையில் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள பேச்சில் ஈடுப்பட்டுள்ளோம்.

ஹற்றன் நகர சபையை வெகுவிரைவில் மாநகர சபையாகத் தரமுயர்த்த பிரதமரும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன இணக்கம் தெரிவித்துள்ளமையுடன், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களை பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

# கோட்டாவுக்கு மீண்டும் அடைக்கலம்கொடுக்க சிங்கள தேசம் தயாராகிக்கொண்டிருக்கின்றது!

## முன்னாள் எம்.பி. சி.சிவமோகன் தெரிவிப்பு



'கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மீண்டும் அடைக்கலம் கொடுக்க சிங்கள தேசம் தயாராகிக்கொண்டிருக்கின்றது' என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்தியருமான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாளில் நடைபெற்ற மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ செய்த இனப்படுகொலைக்கு அவருக்கு மகுடம் சூடும் நடவடிக்கைகளை சில பிக்குகள் ஆரம்பித்துள்ளார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இரண்டாயிரம் நாள்களைக் கடந்துள்ளது.

இந்த யுத்தக்குற்றம் இனப்படுகொலை அனைத்துக்கும் தலைமை தாங்கியவர் கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் தலைமையின் கீழ் 50 இற்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகள்.

எங்கள் கோரிக்கையுடன் தருஸ்மன் அறிக்கை ஏற்கனவே ஐ.நா. சபையில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினை சர்வதேசத்தின் ஐ.நா. சபையின் அரசியல் விவகார பிரிவில் உள்வாங்கப்பட்டு விட்டது.

எனவே இனி ஏன் கால நீடிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது தான் எங்களின் கேள்வி.

இன்று பதவியை இழந்து எந்தவித சிறப்பு உரிமைகளும் அற்று எந்த நாட்டுக்கும் செல்லமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

மீண்டும் அவருக்கு அடைக்கலம் கொடுப்பதற்கு சிங்கள தேசம் ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

இன்று அவர் செய்த இனப்படுகொலைக்கு அவருக்கு மகுடம் சூடும் நடவடிக்கைகளை சில பிக்குகள் ஆரம்பித்துள்ளார்கள்.

சிங்கள தேசம் அதற்கு ஒத்தூதிக்கொண்டிருக்கின்றார்கள். சிங்கள அரசியல் வாதிகள் அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இது எங்களுக்கு கட்டியம் கூறுகின்றது.

மீண்டும் இந்த இனப்படுகொலையாளிகளை அழைத்துக்கொண்டுவந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள்.

இன்று நாம் ஐ.நா. சபையிடம் கோரியிருப்பது இந்த இனப்படுகொலைகளை நடத்தி இலங்கைக்கு வந்தவர்களாக இருக்கட்டும் அல்லது வேறு நாடுகளில் சென்று இருப்பவர்களாக இருக்கட்டும் இவர்கள் அனைவரும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்படாதவரை இலங்கைத் தமிழர்களுடனான சுமுகமான உறவை – அரசியல் நிலைப்பாட்டை – ஸ்திரத்தன்மையை – இந்த நாடு நிலைத்து நிற்க முடியாது.

இந்த பொருளாதாரத்தில் நாடு இன்று வீழ்ந்து கிடப்பதற்கான முக்கிய காரணம் தமிழர்கள் மீது பெருமெடுப்பில் நடத்தப்பட்ட இனப்படுகொலை தான். யுத்தங்கள் தான். பெருந்தொகையான பணத்தை முதலிட்டு யுத்தங்களை நடத்தி முடித்தார்கள்.

இன்று அவர்கள் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. ஆனால் ஒரு சிங்கள அரசியல் தலைவர் இன்றுவரை நாடாளுமன்றத்திலும் சரி பொது வெளியிலும் சரி யுத்தத்தால் தான் நாடு அதல பாதாளத்திற்கு சென்றது என்று கூறுகின்றார்களா இல்லையே.

எனவே எமது உரிமைகளை மட்டும் நிலை நிறுத்தத்தான் நாங்கள் இருக்கின்றோம். தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்தக்குற்றங்களை இனப்படு கொலைகளுக்கு பெருந்தொகையான ஆதாரங்கள் இருக்கின்றன. அனைத்தும் வெளியில் வந்த உண்மைகள். இவைகளையும் தருஸ்மன் அறிக்கையையும் முன்னிறுத்தி இங்கு ஒரு சர்வதேச விசாரணை உடனடியாக நடத்தப்படவேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொன்னாலை பருத்தித்துறை வீதி மக்கள் பாவனைக்காகத் திறப்பு!

## ஆளுநர் ஜீவன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், கீரிமலை ஊடான பொன்னாலை – பருத்தித்துறை வீதியை மக்கள் பாவனைக்காக முற்றாகத் திறந்துவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்துள் மேற்படி வீதி காணப்பட்ட நிலையில், கடந்த நல்லாட்சி கால பகுதியில் அப்பகுதி மக்கள் மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டு வீதியும் திறந்து விடப்பட்டது.

ஆனாலும் அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையிலையே மக்கள் வீதியின் ஊடாக போக்குவரத்து செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்து இருந்தனர்.

இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் மயிலிட்டி பகுதியில் உள்ள இராணுவ பொலிஸ் காவலரனின் வீதிதடை போடப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருக்கும்.

குறித்த வீதியை முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்து விடுமாறு நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் வீதி இன்று முதலாம் திகதி முதல் 24 மணி நேரமும் திறந்து இருக்கும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2022இல் வெளியிடப்பெற்றது.